

அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, தலைமையில் நேற்று (10.04.2025) ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் புதிய கட்டிடங்களை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் த.மனோ தங்கராஜ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் உட்பட பலர் உள்ளார்கள்.



திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி ஆண்டார்குப்பம் பகுதியில் வருகின்ற 18 ஆம் தேதி அன்று தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும் இடத்தில் நிகழ்ச்சிக்கான பந்தல் அமைக்கும் பணியினை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்து பார்வையிட்டார். அருகில் மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ.கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், மற்றும் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### அரசு மருத்துவமனைகளுக்குச் செல்வதில்

# அனைத்து தரப்பட்ட பொதுமக்களும் மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்!

கன்னியாகுமரி,ஏப்.11-

கன்னியாகுமரி மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் புதிய கட்டடங்கள் திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, தலைமையில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மைதானத்தில் நேற்று (10.04.2025) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் கலந்து கொண்டு புதிய கட்டிடங்களை திறந்து வைத்தும், நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரி வளாகத்தில் ரூ.20 கோடி மதிப்பில் 50 படுக்கை வசதியுடன் கூடிய அதிதீவிர சிகிச்சை பிரிவு கட்டிடமும், ரூ.4 கோடி மதிப்பில் ரேடியோதெரபி கட்டிடம் என மொத்தம் ரூ.24 கோடி மதிப்பில் கட்டிட பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஏற்கனவே மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் பல்வேறு புதிய பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ரூ.90 இலட்சம் மதிப்பில் கன்னியாகுமரி அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1735 சதுரடியில் தரை மற்றும் முதல் தளங்களுடன், 100 நோயாளி உடனாளர்கள் தங்கும் வகையில் அறை திறந்து வைக்கபட்டுள்ளது. தொடர்ந்து ரூ.40.28 கோடி செலவில் கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தைகள் தீவிர சிகிச்சை மையம், கூடுதல் நூலக கட்டிடம், மாணவியர் விடுதி, மாணவர் விடுதி, தேர்வுகூட கட்டிடம், விரிவுரைகூடம், சலவை இயந்திரங்கள் மற்றும் உயர் மருத்துவ உபகரணங்கள் திறந்து வைக்கப்பட்டு, மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

நமது தமிழ்நாடு முதலமைச்சர் பதவியேற்ற நாளிலிருந்து ரூ.40.28 கோடி மதிப்பில் கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதல் வசதிகள் செய்து, தமிழ்நாட்டிலேயே புகழ்பெற்ற மருத்துவக்கல்லூரி மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. 100 ஏக்கர் பரப்பளவில் பசுமை நிறைந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனையாக உள்ளது. மற்ற மருத்துவ கல்லூரியை விட நமது மருத்துவக்கல்லூரி மிகவும் மன நிறைவும் மன மகிழ்ச்சியும் வருகிறவர்களுக்கு கிடைக்கும் என்கிற வகையில் இந்த அமைப்பு, இயற்கையிலேயே அமைந்துள்ளது.

தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் பதவியேற்பதற்கு முன்பாக நமது ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு 1200 முதல் 1300 நோயாளிகள் வந்து மருத்துவ சேவையை பெற்றுள்ளார்கள். ஆனால் தற்போது ஒரு நாளைக்கு 2500 நோயாளிகள் வந்து மருத்துவ சேவையை பெற்றுள்ளார்கள். அரசு மருத்துவ சேவையை பயன்படுத்துகிற வண்ணம் கன்னியாகுமரி மாவட்ட மக்களின் எண்ணிக்கை கூடுகிறது. பொதுமக்கள் அதிகமாக வரும் அளவுக்கு மருத்துவ வசதிகள் நமது மருத்துவக்கல்லூரியில் மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் தங்களது இலட்சியம் என்னவென்று கேட்டார்கள். அதற்கு நான் ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு மக்கள், மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் அரசு மருத்துவமனைகளில் 100 சதவீதம் அரசு மருத்துவ சேவையை மக்கள் பயன்படுத்திக்கொள்கிற நிலையை உருவாக்குவது தான் என்னுடைய நோக்கம் என்றேன். அதன்படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி எண்ணமானது நிறைவேறி கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு முழு காரணம் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்கள் உள்ளிட்டவர்களால் தான் மருத்துவ சேவையை உயர்த்தி கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் என்னிடம் ரூ.100 கோடி மதிப்பில் மருத்தவ மேம்பாட்டு பணிகளுக்காக என்னிடம் கோரிக்கை மனு அளித்துள்ளார்கள். கண்டிப்பாக இந்த கோரிக்கையினை நமது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கவனத்திற்கு கொண்டு சென்று பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்வதோடு, அரசு மருத்துவமனைகளுக்கு செல்வதில் கன்னியாகுமரி மாவட்ட அனைத்து தரப்பட்ட பொதுமக்களும் மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் பேசினார்கள்.

அதனைத்தொடர்ந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்கு மருந்து பெட்டகம், 10 பயனாளிகளுக்கு நோய் தடுப்பு பாராமரிப்பு பெட்டகம் உள்ளிட்ட 134 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் மனோ தங்கராஜ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. இராமலெட்சுமி, இணை இயக்குநர் பொதுசுகாதாரம் சென்னை மரு.செந்தில், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, மாவட்ட சுகாதார அலுவலர் (மு.கூ.பொ) மரு.பிரபாகரன், உறைவிட மருத்தவர் மரு. ஜோசப்சென், உதவி உறைவிட மருத்துவர் மரு.விஜயலெட்சுமி, உதவி இயக்குநர்கள் இராமலிங்கம் (பேரூராட்சிகள்), சிதம்பரம் (ஊராட்சிகள்), துணை மேயர் திருமதி.மேரிபிரின்சிலதா, மண்டலத்தலைவர் செல்வகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.புஷ்பலீலா ஆல்பன், இந்து சமய அறங்காவலர் குழு தலைவர் (சுசீந்திரம்) பிரபா ஜி இராமகிருஷ்ணன், மாநகராட்சி உறுப்பினர் திருமதி.மோனிகா விமல், மருத்தவர்கள், செவிலியர்கள், துறை அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### விண்ணப்பிக்கும் மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும்

# செயற்கை அவயங்கள் வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்!

## சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பில் – அமைச்சர் கீதா ஜீவன் தகவல்!

சென்னை, ஏப்.11-

சட்டப்பேரவையில் உறுப்பினர் இரா. அருள், "விண்ணப்பிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கை அவயங்கள் விரைந்து வழங்கப்பட வேண்டியது குறித்து சிறப்பு கவன ஈர்ப்பு கொண்டு வந்து பேசினார்.



இதற்கு பதிலளித்து அமைச்சர் கீதா ஜீவன் பேசியபோது:-

இந்த நவீன செயற்கை அவயங்கள் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்து, தகுதியான மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் பின்பு அவர்களுக்கு நேரடியாக ஆய்வு செய்யப்பட்டு அந்த அவயங்கள் செய்து, பொருத்தி பயிற்சி அளிக்கப்பட்டு அந்த 30 நாட்களில் கட்டாயம் வழங்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, அப்படித்தான் வழங்கப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் கூட 2022-2023 லிருந்து இதுவரைக்கும் உங்களுடைய மாவட்டத்தில் மட்டும் 194 நவீன செயற்கை அவயங்கள் அதாவது கை மற்றும் கால்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆக, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அந்த ஒரு குறிப்பிட்ட நபருக்கு மனுக்கள் எந்த நிலையில் இருக்கிறது. பெறப்பட்டுள்ளதா, ஆய்வில் இருக்கிறதா என்பதை கண்டிப்பாக இந்த அரசு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

இதுமாதிரி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துறை தனியாக உருவாக்கப்பட்டிருந்தாலும் அதற்குக் கோட்ட அளவில், தாலுகா அளவில், ஒன்றிய அளவிலே அதிகாரிகள் யாரும் நியமிக்கப்படாத நிலை இருந்தது.

அதை இப்போது முதலமைச்சர் அவர்கள் விரைந்து அதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதேபோல நீங்கள் சொன்னதுபோல ஒரு மாவட்டத்திலுள்ள அந்த மாற்றுத் திறனாளி நல அலுவலர் இல்லையென்று சொன்னீர்கள். அதற்காகவும் முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து மூன்று மாதத்திற்கு முன்பாகவே சேலம் மற்றும் நாமக்கல் இரண்டிற்கும் நாமக்கல் மாவட்டத்திற்கென்று தனியாக அலுவலர் நியமிக்கப்பட்டுவிட்டார் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுவும் குறிப்பாக, வருவாய்த் துறையிலிருந்து தாசில்தார் நிலையிலுள்ள அந்த அலுவலரை எங்கெங்கு காலிப் பணியிடம் இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த அரசு நியமித்துள்ளது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல இந்த நபர் வந்து கீழ்மட்ட அதிகாரிகள் எதுவென்றாலும் அந்த மனு தவறுதலாக எங்கேயாவது விடுபட்டிருக்கலாம். அதுதான் காரணமாக இருக்க முடியும். மற்றபடி நம்முடைய இந்த திராவிட மாடல் அரசு முதலமைச்சர் அவர்கள் வந்தவுடனே, நிலுவையில் இருக்கும் அத்தனை நபர்களுக்கும் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டன. அதுபோல குறிப்பாக கடந்த ஆண்டு மட்டும் 2023-2024-ல் 38,384 பேருக்கு 85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆண்டில் 33,737 நபர்களுக்கு 132 கோடி ரூபாயில் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, நிலுவையில் எத்தனை பேர் கேட்டாலும் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்றுதான் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கீதாஜீவன் பதிலளித்து பேசினார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! அமுதா பொன்னிவளவன் தலைமையில்

# கொளத்தூர் கிழக்கு பகுதி 67-வது வட்டம் சார்பில் - மாபெரும் பொதுக்கூட்டம்!

## மேயர் பிரியா - முனைவர் பர்வின் சுல்தானா - குமரி விஜயகுமார் - திவ்யா சத்யராஜ் - நித்யஸ்ரீ மகாதேவன் சிறப்புரை!

சென்னை, ஏப்.11

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., கழக தலைவர் 72-வது பிறந்தநாள் - மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு - கொளத்தூர் கிழக்கு பகுதி, 67-வது வட்டம் சார்பில் - மாபெரும் பொதுக்கூட்டம் - பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், முனைவர் பர்வின் சுல்தானா, திருமதி.குமரி விஜயகுமார், திருமதி. திவ்யா சத்யராஜ், திருமதி. நித்யஸ்ரீ மகாதேவன் ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 49, பலனை எதிர்பாரா பண்பாளர்! நிலையில் தடம்மாறா நெறியாளர்!! எனும் தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் 12.04.2025 சனிக்கிழமை அன்று மாலை 06.00 மணியளவில், சென்னை, ஜெயின்பள்ளி, அகரத்தில் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்தில் 67-வது வார்டு மாமன்ற உறுப்பினர், சென்னை பல்கலைக்கழக ஆட்சி பேரவை உறுப்பினர் அமுதா பொன்னிவளவன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராஜன், கே. சந்துரு, சி. மகேஷ் குமார், சரிதா மகேஷ்குமார், வானவில் விஜய், தேவஜவகர், எஸ்.பன்னீர் செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ம. அசோக்குமார். அ.சித்திக் முன்னிலை வகிக்கின்றனர்.

பி . ப ழ னி , இள.இளங்கோவன், எம். தாவூத்பீ, எஸ்.கே.ரமேஷ், எல். டி.தாமஸ், பி.டி.சி.ரவி, கே.பி. ஆதவன்மணி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், பி.ஊமைதுரை, சி.ஸ்ரீதணி எம்.சி, டி.யோகபிரியா எம்.சி, கே.சாரதா எம்.சி. வரவேற்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் விழாவில் - பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், முனைவர் பர்வின் சுல்தானா, திருமதி.குமரி விஜயகுமார், திருமதி. திவ்யா சத்யராஜ். திருமதி. நித்யஸ்ரீ மகாதேவன் ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., ப.ரங்காதன், இரா.விடுதலை,

மாநில நிர்வாகிகள்: கே.எஸ். ரவிச்சந்திரன், சங்கரிநாராயணன், நன்மாறன், தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, எஸ். மணிமுடி, ஆர்.வரதன், கே.எஸ். எம்.நாதன், எம்.விஜயகுமார், பரிதிஇளம்சுருதி, என்.பி.எம். ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், இந்திரஜித்,

மாவட்ட நிர்வாகிகள் கோ. ஏகப்பன், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், பகுதி கழக செயலாளர்கள்: கூ.பி. ஜெயின், வே.வாசு, எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், டி.எஸ்.பி.இராஜகோபால், எம். டி.ஆர்.நாகராஜன், எஸ்.முரளி, சொ.வேலு, எஸ்.ராஜசேகர், வி. சுதாகர்,

பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, த.வ.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், பி. ஜே.துளசிங்கம், பி.உதயசங்கர், ரமேஷ்(எ) நீலகண்டன், எம்.இப்ராஹிம்கனி, ஏ.பி.பூர்ணிமா, ஆ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: ப.ஜெகதீஷ் ஜெ.பாலமுருகன், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, வானவில்விஜய், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர். சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சிறப்பிக்கின்ற னர்.

இந்நலத்திட்ட விழாவில் கே.ஜார்ஜ்குமார், ந.பொன்முடி, கோ.பொன்னிவளவன் நன்றி கூறுகிறார்கள்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# "அன்னம் தரும் அமுதகரம்" 49-வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,ஏப்.11-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 49 ஆம் நாளான - கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு 09.4.2025 அன்று வில்லிவாக்கம் கிழக்கு பகுதி- இடம்: 1) சீதா தோப்பு சபாபதி தெரு சந்திப்பு, அயனாவரம்,



சென்னை. 2) பெரியார் சாலை, குடிசை மற்றம் வாரியம் குடியிருப்பு, அயனாவரம் ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதி மொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அ. வெற்றி அழகன், வே.வாசு, கூ.பீ.ஜெயின், லதா வாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ.விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயான், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ)உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகு பாபு இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர். கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி தொகுதி பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் விவேக் ஆங்கில பள்ளியின் 31.ஆம் ஆண்டு விழா மாவட்ட அமைப்பாளர் இ.கே. உதயசூரியன், தலைமையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினார். உடன் பேரூர் செயலாளர் டிஆர். கே. பாபு, மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ. ஏ. நாகலிங்கம், ஜி.எஸ். பழனி, ஏ.டி.கே. தண்டபாணி, பள்ளி முதல்வர் எம்.பி. குமார், பி.ஜி.சிவகுமார், ஜி.ஏழுமலை,உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# திருவள்ளூர் திரு.வி.க. பேருந்து நிலையத்தில் புதிய பேருந்துகள்!

## வி.ஜி. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. கொடியசைத்து துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் ஏப்ரல் 11.

திருவள்ளூர் திருவிக பேருந்து நிலையத்தில் புதிய பேருந்துகளை இயக்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் சென்னை - திருப்பதி செல்லும் 201 பேருந்து வழித்தடத்திற்கு புதிய பேருந்துகள் 3 - ம் திருவள்ளூர் திருத்தணி செல்லும் வழிதடத்திற்கு ஒரு பேருந்தும், திருவள்ளூர் மெய்யூர் செல்லும் வழிதடத்திற்கு ஒரு பேருந்தும் மொத்தம் 5 - புதிய பேருந்துகளை இன்று திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் அரசு போக்குவரத்து துறை பொது மேலாளர் கோபாலகிருஷ்ணன், துணை பொது மேலாளர் வெங்கடேசன், பணிமனை மேலாளர் பாஸ்கரன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், மாவட்ட அவைத்தலைவர் க.திராவிட பக்தன், ஒன்றிய செயலாளர்கள் எஸ். மகாலிங்கம், கே. அரிகிருஷ்ணன் மோ. ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் ப. சிட்டி பாபு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா. மோதிலால், திருவள்ளூர் நகராட்சி முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், நகரக் கழக நிர்வாகிகள் ஆ.கமலக்க ண்ணன், ராஜேஸ்வரி கைலாசம், இ.குப்பன், கொப்பூர் டி.திலீப் குமார் , நாபளூர் குமார் , மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கு. பிரபாகரன், கே.வீனஸ் , ஆர். வாசு, புட்லூர் ஆர்.ராஜேந்திர குமார், என். சுரேஷ்குமார், நகர இளைஞரணி அ

. பவளவண்ணன், டி.என் பன்னீர்செல்வம், எஸ்.பாபு, சி.டி.பாபு, தொழிற்சங்க நிர்வாகிகள் முரளி, ரவி, பழனி, சாம்ராஜ், ஆறுமுகம், ராஜேந்திரன், விஜயகுமார் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை – திருப்பதி செல்லும் 201 பேருந்து வழித்தடத்திற்கு புதிய பேருந்துகள் 3, திருவள்ளூர் திருத்தணி செல்லும் வழிதடத்திற்கு 1, திருவள்ளூர் மெய்யூர் செல்லும் வழித்தடத்திற்கு 1 என மொத்தம் 5 – புதிய பேருந்துகளை நேற்று திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கோபாலகிருஷ்ணன், வெங்கடேசன், பாஸ்கரன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், க.திராவிட பக்தன், எஸ். மகாலிங்கம், கே. அரிகிருஷ்ணன், மோ. ரமேஷ், ப. சிட்டிபாபு, தா. மோதிலால், பொன். பாண்டியன், ஆ.கமலக்கண்ணன், ராஜேஸ்வரி கைலாசம், இ.குப்பன், கொப்பூர் டி.திலீப் குமார் , நாபளூர் குமார் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.